கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

அ.வ.எண்.392/2020 வா.சா.1 சத்தியமூர்த்தி

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 10.11.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) இவ்வழக்கு வா.சா.ஆ. 1 கிரைய ஆவண அடிப்படையில் தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 கிரைய ஆவணத்தில் முத்தக்காள் , வெங்கடாசலம், மைனர். சுப்பிரமணியம் ஆகியோர் கிரையம் பெற்றுள்ளனர் என்றால் சரிதான் . மேற்படி வெங்கடாசலமும் , மைனர். சுப்பிரமணியத்தின் தந்தை ராமசாமியும் சகோதரர் என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 கிரைய சமயத்தில் ராமசாமி இறந்த இருந்ததால் அவரது மகன் மைனர். சுப்பிரமணியம் பெயரில் கிரையம் பெறப்பட்டது என்றால் சரிதான். மைனர். சுப்பிரமணியத்தின் காப்பாளராக அவரது தாயார் சென்னக்காள் வா.சா.ஆ. 1 கிரையம் பெற்றார் என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 ஆவணத்தில் கிரையம் பெற்ற முத்தக்காள் , வெங்கடாசலம், மைனர். சுப்பிரமணியம் ஆகியோரும் மைனர். சுப்பிரமணியத்தின் காப்பாளராக இருந்த அவரது தாயார் சென்னக்காளும் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். மேற்படி நபர்களின் இறந்த தேதிகளை வழக்குரையிலோ , சாட்சியத்திலோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

2) மேற்படி நபர்கள் இறந்த ஆண்டை கூட குறிப்பிட்டு சொல்லாமல் தோராய காலத்தை மட்டுமே குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். மேற்படி சுப்பிரமணியம் இறந்த போது அவருக்கு மனைவி குழந்தைகள் இருந்தனர் என்றால் சரியல்ல . அவர் திருமணம் ஆகாமலேயே இறந்து விட்டார். மேற்படி சுப்பிரமணியத்தின் இறப்பு சான்றோ , வாரிசு சான்றோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி சுப்பிரமணியத்திற்கு வாரிசுகள் உள்ளனர்

என்றும் வட்டாட்சியர் அலுவலகத்தில் வாரிசு சான்று பெற்றால் உண்மை தெரிந்து விடும் என்பதால் தான் அதனை பெற்று தாக்கல் செய்ய நாங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அவரது வாரிசு சான்று பெற நாங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். சுப்பிரமணியத்தின் பாட்டி முத்தக்காளின் இறப்பு சான்றோ , வாரிசு சான்றோ பெற நாங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். வட்டாட்சியர் அலுவலகத்தில் முத்தக்காளின் வாரிசு சான்று பெற்றால் உண்மை தெரிந்து விடும் என்பதால் தான் அதனை பெற்று தாக்கல் செய்ய நாங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

3) வாரிசு சான்று இன்றி 1 ம் வாதி சவுண்டம்மாள் சுப்பிரமணியத்தின் சகோதரி என கூறுவது தவறு என்றால் சரியல்ல. 2, 3 , 4 வாதிகள் 1ம் வாதியின் வாரிசுகள் என்றால் சரிதான். 1ம் வாதிக்கு 2, 3, 4 வாதிகள் மற்றும் மனோன்மணி ஆகிய நால்வரும் குழந்தைகள் என்றால் சரிதான். மனோன்மணிக்கு சரவணன் என்பவருடன் திருமணம் ஆகி இருந்தது என்றால் சரிதான். மேற்படி இருவரும் இறந்து விட்டனர். 1 ம் வாதியின் வாரிசு சான்றை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2 ம் வாதியின் வாரிசு சான்றை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2 ம் வாதி தனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் அவரது காலத்திற்கு பின்பு எனக்கு தான் என உயில் எழுதியுள்ளார் . அத்தகைய உயில் பதிவு செய்யப்பட்டதா என்றால் எழுதிமட்டும் கொடுத்துள்ளார்கள். அந்த உயிலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி உயில் பற்றி என் சாட்சிய வாக்குமூலத்தில் வெறுமெனே உயில் என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் ஆனால் அதனது விவரங்கள் ஏதும் குறிப்பிடவில்லை என்றும் சொன்னால் சரிதான்.

4) அவ்வாறு உண்மையில் உயில் இருந்திருப்பின் அதன் தேதி, சாட்சிகள், சொத்து விவரங்கள் முதலிய விவரங்களை என் சாட்சியத்தில் குறிப்பிட்டு அந்த உயிலையும் குறியீடு செய்திருப்பேன் என்றால் நான் உயிலை தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு ஒரு உயிலை நான் ஒருபோதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

5) மனோன்மணியின் வாரிசு சான்றை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மனோன்மணியின் வாரிசு சான்றை தாக்கல் செய்தால் உண்மையான வாரிசு தெரியவரும் என்பதால் தான் தாக்கல் செய்யவில்லை என்றால் 1ம் வாதிக்கு முன்பே அவர் இறந்துவிட்டதால் தாக்கல் செய்யவில்லை. இவ்வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள முத்தக்காள், வெங்கடாசலம், சுப்பிரமணியம் , சென்னக்காள்,ராமசாமி சவுண்டம்மாள், ஈஸ்வரி, மனோன்மணி ஆகியோரது இறப்பு சான்றோ வாரிசு சான்றோ நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சவுண்டம்மாளின் வாரிசு சான்றை மட்டும் தாக்கல் செய்துள்ளோம். மேற்படியோரின் முறையான வாரிசுகளை மறைத்து அவர்களது சொத்துக்களை அபகரிக்கவே மேற்படியோரின் இறப்பு சான்று , வாரிசு சான்று எதையுமே நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நீதிமன்றத்தை திசை திருப்ப தான் மேற்படியோரின் வாரிசு சான்றுகளை பெற நாங்கள் எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

6) வழக்கு சொத்து முத்தஞ் செட்டியாரின் வாரிசுகள் ஆன மனைவி முத்தக்காள் மகன் வெங்கடாசலம் மற்றொரு மகன் ராமசாமி வழி பேரன் சுப்பிரமணியம் ஆகியோரால் வா.சா.ஆ. 1 கிரையம் பெறப்பட்டது என்றால் சரிதான். மேற்படி சொத்து முத்தஞ் செட்டியாரின் வாரிசுகளுக்கு பாத்தியப்பட்டதன் காரணமாக முத்தஞ் செட்டியாரின் மற்ற ஆண் வாரிசுகள் இறந்து போய்விட்டதன் காரணமாக சுப்பிரமணியத்தின் இறப்பிற்கு பின் அவரது தாயார்

சென்னக்காள் அச்சொத்தை வெங்கடாசலம் மனைவி சிவகாமி விட்டு கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல.

7) சென்னக்காள் இறப்பிற்கு பின் வாதிகள் யாரும் வழக்கு சொத்தில் பாத்தியம் கோரவில்லை என்றால் சரியல்ல. 1ம் வாதியின் மகளான 2 ம் வாதி ஈஸ்வரி வழக்கு சொத்தில் குடியிருந்ததால் நாங்கள் அதனை கண்டு கொள்ளவில்லை. 2 ம் வாதி ஈஸ்வரி வெங்கடாசலத்தின் மகனான பழனிசாமியின் மனைவி என்றால் சரிதான். சென்னக்காள் சுப்பிரமணியத்திற்கு வந்த சொத்துக்களை பொறுத்து சிவகாமிக்கு விட்டு கொடுத்த காரணத்தால் தான் நத்தம் நில வரி திட்டத்தின் கீழ் சிவகாமி பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. சிவகாமி இறப்பிற்கு பிறகு தான் அவர் பெயரில் பட்டா பெறப்பட்டுள்ளது. நத்தம் நில வரி திட்டத்தின் படி 1994 ஆம் ஆண்டிலேயே பட்டா வழங்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. அதற்கு முன்பே சிவகாமி இறந்து விட்டார். 2020 தான் பட்டா பெறப்பட்டது. நத்தம் பட்டா வழங்கப்படும் போது அதற்கு ஆட்சேபணை தெரிவிக்க உரிய காலக்கெடு கொடுத்து அதன் பின் விசாரணை செய்து தான் பட்டா வழங்குவர் என்றால் சரிதான். ஆனால் சிவகாமி பெயரில் அவ்வாறு பட்டா பெறவில்லை. எங்களுக்கு வழக்கு சொத்தில் பாத்தியம் இல்லாததால் தான் நாங்கள் ஆட்சேபணை செய்யவில்லை என்றும் சிவகாமி பாத்தியம் இருந்ததால் தான் பட்டா பெற்று முழு உரிமையாளராக இருந்து 6 ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ. 14 கிரையம் கொடுத்துள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல.

8) 6 ம் பிரதிவாதி வா.சா.ஆ. 14 கிரைய ஆவணத்தின் படி முறையாக கிரையம் பெற்று நாளது தேதி வரை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. வழக்கு பரிகாரங்கள் எங்களுக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. மாண்புமிகு . பொள்ளாச்சி சார்பு நீதிமன்றத்தில் நாங்கள் தாக்கல் செய்த பாகப்பிரிவினை வழக்கு அ.வ.எண் . 176/2020 ஆக நிலுவையில்

உள்ளது என்றால் சரியல்ல. அவ்வழக்கு 3 மாதங்களுக்கு முன் எங்களுக்கு ஆதரவாக தீர்ப்பாகிவிட்டது. வா.சா.ஆ. 14 கிரைய ஆவணம் செல்லத்தக்கது அல்ல என கோரிய பரிகாரம் பாகப்பிரிவினை வழக்கிலேயே கோரப்பட்டிருக்க வேண்டும் என்றும் இவ்வழக்கில் அதனை கோரியது ஏற்புடையது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கு ஏ அட்டவணைச் சொத்து விவரத்தில புல எண்கள் குறிப்பிடவில்லை என்றால் தெரியவில்லை. வழக்கு சொத்து விவரங்களும் வா.சா.ஆ. 1 சொத்து விவரமும் மாறுப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தவறான சொத்து விவரத்தின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் அது தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியபடி நான் கூற தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**ஒப்பம்/- (மு.ச. ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி